

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 06.02.2026

# பேச விடுங்கள் அல்லது பதில் சொல்லுங்கள்!

**நா**டாளுமன்றத்தில் குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் நடைபெற்று வருகிறது. இதில் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்திக்கு பேச அனுமதி தரப்பட்டது. அவர் பேசத் தொடங்கினார். பேச விடவில்லை. கூச்சல், குழப்பத்தை ஆளும் பா.ஜ.க.வே உருவாக்கியது.

லடாக்கில் சீன ஆக்கிரமிப்பு குறித்து ராகுல் காந்தி பேச முயற்சித்தார். முன்னாள் ராணுவத் தளபதி எம்.எம்.நரவனே எழுதி வெளிவராத ஒரு புத்தகத்தைப் பற்றிய கட்டுரையை 'கேரவன்' இதழ் வெளியிட்டிருந்தது. அந்த இதழ் கட்டுரையை கையில் ஏந்தியபடி ராகுல் காந்தி பேசத் தொடங்கினார்.

ராகுல் காந்தி அந்தப் புத்தகத்தை காட்டி பேசத் தொடங்கியதும், பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் கடும் எதிர்ப்புத் தெரிவித்தார். வெளிவராத புத்தகத்தை அவையில் காட்டி பேசுவது விதிகளுக்கு எதிரானது என்று அமைச்சர் ராஜ்நாத் சிங் கூறினார். ராகுலை பேச அனுமதிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் கோரிக்கை வைத்தன. ஆனால் அவைத்தலைவர் அனுமதிக்கவில்லை.

**"நமது தேசபக்தி, இந்தியக் கலாச்சாரம் பற்றிய நமது புரிதல் குறித்து கேள்வி எழுப்பியதால், நான் ஒன்றை வாசிப்பதன் மூலம் தொடங்க விரும்புகிறேன். இது ராணுவத் தளபதி நரவனேவின் நினைவுக் குறிப்பிலிருந்து எடுக்கப்பட்டது. நீங்கள் நன்றாகக் கேட்டால், யார் தேசபக்தர், யார் தேசபக்தர் இல்லை என்பதை நீங்கள் சரியாகப் புரிந்துகொள்வீர்கள்," என்றார் ராகுல் காந்தி. இதற்கு மேல் அவரை பேச அனுமதிக்கவில்லை.**

இந்தியாவின் முன்னாள் ராணுவத் தளபதி ஜெனரல் மனோஜ் முகுந்த் நரவனே எழுதி வெளிவரவுள்ள 'ஃபோர் ஸ்டார்ஸ் ஆப் டெஸ்டினி' (FOUR STARS OF DESTINY) என்ற நூலிலிருந்து சில பகுதிகள் Caravan ஆங்கில இதழில் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதனைத் தான் ராகுல் காந்தி மேற்கோள் காட்டி பேச முயற்சித்தார்.

2020-2021ஆம் ஆண்டில், இந்திய எல்லைக்குள் சீன ஊடுருவல் நடக்கிறது. இதனை இந்திய ராணுவத்தின் வடக்கு கமாண்ட் தலைமை அதிகாரியாக இருந்த லெப்டினன்ட் ஜெனரல் ஜோஷி உடனடியாக இந்திய ராணுவத் தளபதி ஜெனரல் மனோஜ் முகுந்த் நரவனேவுக்குச் சொல்கிறார். அவர், இந்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல், முப்படை தளபதி பிபின் ராவத், வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் என ஒவ்வொருவருக்கும் சொல்கிறார். இவர்கள் நால்வரும் உடனடியாக முடிவுகள் எடுக்கவில்லை. ஒரு நாள் வரைக்கும் முடிவே எடுக்கவில்லை. இதனைத்தான் சொல்கிறார் தனது நூலில்.

இதைத்தான் சொல்கிறார், மேற்கோள் காட்டுகிறார் ராகுல் காந்தி...

"இது ராணுவத் தளபதி நரவனேவின் நினைவுக் குறிப்பிலிருந்து எடுக்கப்பட்டது. நீங்கள் நன்றாகக் கேட்டால், யார் தேசபக்தர், யார் இல்லை என்பதை நீங்கள் சரியாகப் புரிந்துகொள்வீர்கள். இதற்கு சிறிது நேரம் ஆகும், இது டோக்லாமில் நான்கு சீன டாங்கிகள் இந்தியப் பகுதிக்குள் நுழைந்தபோது நடந்ததைப் பற்றியது. அவர்கள் ஒரு முகட்டைக் கைப்பற்றிக் கொண்டிருந்தனர். ராணுவத் தளபதி எழுதுகிறார், அவருடைய புத்தகத்தை மேற்கோள் காட்டும் ஒரு கட்டுரையிலிருந்து நான் மேற்கோள் காட்டுகிறேன்," என்று ராகுல் சொன்னார். அவரை வாசிக்கவிடவில்லை. பேசவிடவில்லை.

'எந்த இதழில் இது வெளியாகி இருக்கிறது?' என்று அவைத்தலைவர் கேட்டார். பத்திரிக்கையின் பெயரை ராகுல் காந்தி சொல்லி விட்டார். 'நான் பேசும் கருத்துக்கு நான் பொறுப்பு ஏற்றுக் கொள்கிறேன்' என்றும் ராகுல் சொல்லி விட்டார். அதன்பிறகும் அவரை பேசவிடாமல் தடுத்தது சரியா?

**"குடியரசுத் தலைவரின் உரையில் தேசிய பாதுகாப்பு என்பது முக்கியமான பகுதியாக இருக்கிறது. எனவே அது பற்றி நாடாளுமன்றத்தில் விவாதிக்க வேண்டும்" என்பதுதான் ராகுலின் கோரிக்கை ஆகும்.**

**இந்தியப் பொருட்களுக்கு அநியாய வரி போடுகிறது அமெரிக்கா. இந்தியர்களை விலங்கு மாட்டி அனுப்புகிறது அமெரிக்கா. இந்திய எல்லைக்குள் புகுந்து வீடு கட்டி விட்டது சீனா. இந்தியப் பகுதிக்கு தனது மொழிப் பெயரை வைக்கிறது சீனா. இந்திய மீனவர்களை தினந்தோறும் கைது செய்கிறது இலங்கை. இந்தியாவுக்குள் பயங்கரவாதிகளை அனுப்பி வைக்கிறது பாகிஸ்தான். இதுதான் இந்தியாவைச் சுற்றி நடக்கும் விவகாரங்கள் ஆகும். இது பற்றிக் கேள்வி எழுப்பினால் என்ன தவறு?**

உலகம் சுற்றி வரும் பிரதமர், உலகத்தை அடக்கி விட்டதாக ஒரு மாய பிம்பத்தை உருவாக்கிக் கொண்டு இருக்கிறார்கள். இதை யாரும் கேள்வி எழுப்பக் கூடாதா? கேள்வி கேட்க வேண்டிய இடம் தானே நாடாளுமன்றம்?

"ஒவ்வொரு உறுப்பினரின் உரிமையையும் காக்க வேண்டியது சபாநாயகரின் கடமை ஆகும். அடிப்படை ஜனநாயக உரிமையை மறுப்பது முன் எப்போதும் இல்லாத சூழலுக்கு வழிவகுத்துள்ளது. நாடாளுமன்ற வரலாற்றிலேயே முதன் முறையாக அரசாங்கத்தின் சார்பாக, குடியரசுத் தலைவர் உரையின் மீது எதிர்க்கட்சித் தலைவர் பேசுவதை தடுக்க அவைத்தலைவர் நிர்பந்திக்கப்பட்டு இருக்கிறார். இது நமது ஜனநாயகத்தின் மீது விழுந்த கறை" என்று சபாநாயகர் ஓம் பிர்லாவுக்குக் கடிதம் எழுதி இருக்கிறார் ராகுல் காந்தி.

**ராகுல் என்ன சொல்ல வருகிறார் என்பது அமைச்சர் ராஜ்நாத் சிங்குக்குத் தெரியும். அவர் உரிய பதிலையாவது சொல்லி இருக்க வேண்டாமா? அப்படி நடக்கவில்லை என்று சொல்லுங்கள். மாறாக, ராகுல் காந்தியை ஒட்டுமொத்தமாக பேச விடாமல் தடுப்பதுதான் நாடாளுமன்ற ஜனநாயகமா? பிறகு எதற்காக நாடாளுமன்றம் கூடுகிறது? எதற்காகக் கூட வேண்டும்?**



விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் சிப்காட் வளாகத்தில் நேற்று முன்தினம் (4.2.2026) உங்களுடன் ஸ்டாலின் திட்டம் 10,000 முகாம்கள் நலத்திட்டப் பயன்கள், 1.80 இலட்சம் புதிய பயனாளிகளுக்கு சமூகப் பாதுகாப்புத் திட்டப் பயன்கள் வழங்கும் விழாவிற்கு வருகை தந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பெருந்திரளான பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.2.2026) விழுப்புரம் மாவட்டம், திண்டிவனத்தில் நடைபெற்ற அரசு விழாவில், 390 கோடியே 44 இலட்சம் ரூபாய் செலவிலான 199 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, 254 கோடியே 29 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 24 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இவ்விழாவில், அமைச்சர்கள் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், சி.வி. கணேசன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் து. ரவிக்குமார், தரணிவேந்தன், முன்னாள் அமைச்சர்கள் முனைவர் க. பொன்முடி, கே.எஸ். மஸ்தான், சட்டமன்ற உறுப்பினர்கள் இலட்சுமணன், அன்னியூர் சிவா, மணிகண்ணன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் பொன். கௌதமசிகாமணி, விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஷே. ஷேக் அப்துல் ரஹ்மான், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.2.2026) விழுப்புரம் மாவட்டம், திண்டிவனத்தில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தில் 10,000 முகாம்கள் நிறைவையொட்டி நடைபெற்ற விழாவில், பல்வேறு மாவட்டங்களிலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக இத்திட்டத்தில் பயன்பெற்ற பயனாளிகள் நன்றி தெரிவித்துக் கொண்டனர். இவ்விழாவில், அமைச்சர்கள் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், சி.வி. கணேசன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் து. ரவிக்குமார், தரணிவேந்தன், முன்னாள் அமைச்சர்கள் முனைவர் க. பொன்முடி, கே.எஸ். மஸ்தான், சட்டமன்ற உறுப்பினர்கள் இலட்சுமணன், அன்னியூர் சிவா, மணிகண்ணன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் பொன். கௌதமசிகாமணி, விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஷே. ஷேக் அப்துல் ரஹ்மான், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

### 120 கிராம் தங்கம் மற்றும்

# 2937 பயனாளிகளுக்கு ரூ.1.51 கோடியில் நல உதவிகள்!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் வழங்கி பேச்சு!

**சேலம், பிப். 6-**

**சேலம் மாவட்டம், சங்ககிரி ஸ்ரீ வாசுதேவ் மஹாலில், 2,937 பயனாளிகளுக்கு ரூ.1.51 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் மற்றும் 120 கிராம் தங்கம் வழங்கும் விழா சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது.**

முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் (04.02.2026) விழுப்புரம் மாவட்டம், திண்டிவனத்திலிருந்து காணொலி காட்சி வாயிலாக உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் 1.80 இலட்சம் புதிய பயனாளிகளுக்கு சமூக பாதுகாப்பு திட்ட பயன்கள் வழங்கும் நிகழ்ச்சியினை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, சேலம், மாவட்டம், சங்ககிரி ஸ்ரீ வாசுதேவ் மஹாலில் இவ்விழா, சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி மற்றும் சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்விழாவில் 2,937 பயனாளிகளுக்கு ரூ.1.51 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் மற்றும் திருமண நிதியுதவி திட்டத்தின் கீழ் 120 கிராம் தங்கம் வழங்கி சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்ததாவது,

முதலமைச்சர் அவர்கள் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு சிறப்பு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக அரசின் சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் சென்றடைய வேண்டும் என்ற நோக்கிலும், அத்திட்டங்களை பொதுமக்கள் எளிதாக பெற வேண்டும் என்ற வகையிலும் திட்டங்கள் அறிவிக்கப்பட்டு அதன் மூலம் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

அதன்படி, முதலமைச்சர் அவர்களின் சிறப்பு திட்டமான "உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் 1.80 இலட்சம் புதிய பயனாளிகளுக்கு சமூக பாதுகாப்புத்திட்ட பயன்கள் வழங்கும் விழாவினை முதலமைச்சர் அவர்கள் விழுப்புரம் மாவட்டம் திண்டிவனத்தில் தொடங்கி வைத்தார்கள். உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் நோக்கமானது தமிழ்நாட்டில் உள்ள கடைகோடி மக்களுக்கு அவர்கள் அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள் மற்றும் திட்டங்களை அவர்கள் வசிக்கும் பகுதிக்கே சென்று வழங்குவதாகும்.

இத்திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டத்தில் 15.07.2025 முதல் 14.11.2025 வரை நகர்புறப் பகுதிகளில் 168 முகாம்களும், ஊரகப் பகுதிகளில் 264 முகாம்களும் என மொத்தம் 432 சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, நகர்ப்புற பகுதிகளில் 13 அரசுத் துறைகளைச் சார்ந்த 43 சேவைகளும், ஊரகப் பகுதிகளில் 15 துறைகளைச் சார்ந்த 46 சேவைகளும் வழங்கப்பட்டு 1,36,409 மனுக்கள் பெறப்பட்டு தீர்வு காணப்பட்டுள்ளது.

மேலும், பொதுமக்களின் உடல் நலனைப் பேணும் வகையில், நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் மருத்துவ சேவைகளும் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தில் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் காப்பீட்டு அட்டை கோரிய 14,026 நபர்களுக்கு காப்பீட்டு அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் ஆதார் சேவையின் கீழ் 11,645 பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர்.

சேலம் மாவட்டத்தில் "உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை கோரி வரப்பெற்ற 1,53,051 விண்ணப்பங்களில் தகுதியின் அடிப்படையில் 83,241 விண்ணப்பங்கள் ஏற்பு செய்யப்பட்டு, புதிய பயனாளிகளுக்கு கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கும் நிகழ்ச்சி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 12.12.2025 அன்று சென்னையில் துவக்கி வைக்கப்பட்டதை தொடர்ந்து சேலம் மாவட்டத்தில் வழங்கப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டத்தில் முதற்கட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தின் கீழ் 5,49,268 பயனாளிகளும், இரண்டாம் கட்டத்தில் 83.241 பயனாளிகளும் என மொத்தம் 6,32,509 பயனாளிகள் பயன் பெற்று வருகின்றனர். மேலும், தற்போது வரை சமூக பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் 2,06,071 பயனாளிகள் பயன் பெற்று வந்த நிலையில், இன்று முதல் கூடுதலாக 7,303 புதிய பயனாளிகள் சேர்த்து மொத்தமாக 2,13,374 பயனாளிகள் பயன் பெறுகின்றனர்.

சேலம் மாவட்டத்தில் "உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் பெறப்பட்ட மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு பல்வேறு நிகழ்ச்சிகளின் மூலம் பயனாளிகளுக்கு நலத்திட்ட பயன்கள் வழங்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து இன்றைய தினம், வருவாய்த்துறையின் சார்பில் 2,777 பயனாளிகளுக்கு ரூ.94,10,698/– மதிப்பிலும், மாவட்ட வழங்கல் துறையின் சார்பில் 100 பயனாளிகளுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டைகளும், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் 1 பயனாளிக்கு ரூ.1,00,600/– மதிப்பிலும், தொழிலாளர் நலத்துறையின் சார்பில் 5 பயனாளிகளுக்கு ரூ.1,32,400/– மதிப்பிலும், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் 10 பயனாளிகளுக்கு ரூ.77,088/– மதிப்பிலும், தாட்கோ சார்பில் 8 பயனாளிகளுக்கு ரூ13,000/– மதிப்பிலும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், வேளாண்மை பொறியியல் துறையின்சார்பில் 11 பயனாளிகளுக்கு ரூ.10,33,123/– மதிப்பிலும், கூட்டுறவுத்துறையின் சார்பில் 4 பயனாளிகளுக்கு ரூ.11,25,000/– மதப்பிலும், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் சார்பில் 3 பயனாளிகளுக்கு ரூ.2,20,555/– மதிப்பிலும், மகளிர் திட்டம் சார்பில் 3 பயனாளிகளுக்கு ரூ24,40,000/– மதிப்பிலும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 15 பயனாளிகளுக்கு ரூ.5,50,500/– மற்றும் திருமண நிதியுதவி திட்டத்தின் கீழ் 120 கிராம் தங்கம் என மொத்தமாக 2,937 பயனாளிகளுக்கு ரூ.1.51 கோடி (ரூ.1,51,02,464/–) மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. முதலமைச்சர் பொதுமக்களின் நலனுக்காக வழங்கும் இத்தகைய திட்டங்களை அனைத்து தரப்பு மக்களும் பெற்று பயனடைய வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்.

இவ்விழாவில், சங்ககிரி வருவாய் கோட்டாட்சியர் செல்வி ம.மு.தே.கேந்திரியா, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத்திட்டம்) திருமதி ஜானகி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திருமதி செண்பகவள்ளி, எடப்பாடி நகர் மன்றத் தலைவர் டி.எஸ்.எம்.பாஷா, சங்ககிரி வருவாய் வட்டாட்சியர் திருமதி வாசுகி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் (04.02.2026) விழுப்புரம் மாவட்டம், திண்டிவனத்திலிருந்து காணொலி காட்சி வாயிலாக உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் 1.80 இலட்சம் புதிய பயனாளிகளுக்கு சமூக பாதுகாப்பு திட்ட பயன்கள் வழங்கும் நிகழ்ச்சியினை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, சேலம் மாவட்டம், சங்ககிரி ஸ்ரீ வாசுதேவ் மஹாலில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் 2,937 பயனாளிகளுக்கு ரூ.1.51 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் மற்றும் திருமண நிதியுதவி திட்டத்தின் கீழ் 120 கிராம் தங்கத்தினை பயனாளிகளுக்கு வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, சங்ககிரி வருவாய் கோட்டாட்சியர் செல்வி ம.மு.தே.கேந்திரியா, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத்திட்டம்) திருமதி ஜானகி, எடப்பாடி நகர் மன்றத் தலைவர் டி.எஸ்.எம்.பாஷா உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.